உ

கடவுள் துணை.

கபிலரகவல்.

இஃது

திருமயிலை

வைதிலிங்கதேசிகரால்

பார்வையிடப்பட்டு.

தஞ்சாவூர்,

சின்னகன்னையசெட்டியார்

அண்டுசன் அவர்களது

சகலகலாநிலைய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1889.

கடவுள் துணை.

கபிலரகவல்.

நான்முகன்படைத்தநா னாவகையுலகில்
ஆன்றசிறப்பின் அரும்பொருள்கூறுங்கால்
ஆண்முதிதோபெண்முதிதோ அன்றியலிமுதிதோ
நாண்முதிதோ கோண்முதிதோ
நல்வினைமுதிதோ தீவினைமுதிதோ
செல்வஞ்சிறப்போ அறிவுசிறப்போ
தொல்லைமாஞாலந் தோற்றமோபடைப்போ
எல்லாப்பிறப்பும் இயற்கையோசெயற்கையோ
காலத்தாற்சாவரோ பொய்ச்சாவுசாவரோ
நஞ்சுறுதீவினை துஞ்சுமோதுஞ்சாதோ
துஞ்சும்போதந்தப் பஞ்சேந்திரியம்
என்செயாநிற்குமோ எவ்விடத்தேகுமோ
ஆற்றலுடையீர் அருந்தவம்புரிந்தால்
வேற்றுடம்பாகுமோ தமதுடம்பாகுமோ
உண்டியையுண்குவ துடலோவுயிரோ
உலகத்தீரோ உலகத்தீரோ
நாக்கடிப்பாக வாய்ப்பறையறைந்து
சாற்றக்கேண்மின் சாற்றக்கேண்மின்
மனிதர்க்குவயது நூறல்லதில்லை

ஐம்பதிரவில் அகலுந்துயிலினால்
ஒட்டியவிளமையால் ஓரைந்துநீங்கும்
ஆக்கையிளமையில் ஐம்மூன்றுநீங்கும்
எழுபதுபோகநீக் கிருப்பனமுப்பதே

அவற்றுள்.

இன்புறுநாளுஞ் சிலவேயதாஅன்று
துன்புறுநாளுஞ் சிலவேயாதலால்
பெருக்காறொத்தது செல்வம்பெருக்காற்
றிடிகரையொத்த திளமையிடிகரை
வாழ்மரமொத்தது வாழ்நாளாதலால்
ஒன்றேசெய்யவும் வேண்டுமொன்றும்
நன்றேசெய்யவும் வேண்டுநன்றும்
இன்றேசெய்யவும் வேண்டுமின்றும்
இன்னேசெய்யவும் வேண்டுமின்னும்
நாளைநாளை என்பீராகில்
நமனுடைமுறைநாள் ஆவதுமறியீர்
நம்முடைமுறைநாள் ஆவதுமறியீர்
எப்போதாயினுங் கூற்றுவன்வருவான்
அப்போதந்தக் கூற்றுவன்றன்னைப்
போற்றவும்போகான் பொருளொடும்போகான்
சாற்றவும்போகான் தமரொடும்போகான்
நல்லாரென்னான் நல்குரவறியான்

தீயானொன்னான் செல்வனொன்றானான்
தரியானொருகணந் தறுகணாளன்
உயிர்கொடுபோவான் உடல்கொடுபோகான்
எதுக்கழுவீ ரேழைமாந்தர்காள்
உயிரினையிழந்தோ உடலினையிழந்தோ
உயிரிழந்தழுதுமென் றோதுவீராகில்
உடலினையன்றலா தின்றுங்காண்கிர்
உயிரினையிழந்த வுடலது தன்னைக்
களவுகொண்ட கள்வனைப்போலக்
காலுமார்த்துக் கையுமார்த்துக்
கூறைகளைந்து கோவணங்கொளுவி
ஈமத்தீயை யெரியெழமூட்டிப்
பொடிபடச்சுட்டுப் புனலிடைமூழ்கிப்
போய்த்தமரோடும் புந்திநைந்தழுவது
சலமெனப்படுமோ சதுரெனப்படுமோ
பார்ப்பனமாந்தர்காள் பகர்வதுகேண்மின்
இறந்தவராயுமை இவ்விடையிருத்திப்
பாவனைமந்திரம் பலபடவுரைத்தே
உமக்கவர்புத்திரர் ஊட்டினபோது
அடுபசியாற்குலைந் தாங்கவர்மீண்டு
கையேந்திநிற்பது கண்டதார்புகலீர்
அருந்தியவுண்டியால் ஆர்பசிகழிந்தது

ஒட்டியர்மிலேச்சர் ஊணர்சிங்களர்
இட்டிடைச்சோனகர் யவனர்சினத்தர்
பற்பலர் நாட்டிலும் பார்ப்பாரிலையால்
முற்படைப்பதனில்வே றாகியமுறைமைபோல்
நால்வகைச்சாதியிந் நாட்டினீர்நாட்டினீர்
மேல்வகைகீழ்வகை விளங்குவதொழுக்கால்
பெற்றமுமெருமையும் பிறப்பினில்வேறே
அவ்விருசாதியில் ஆண்பெண்மாறி
கலந்துகருப்பெறல் கண்டதுண்டோ
ஒருவகைச்சாதியா மக்கட்பிறப்பிலீர்
இருவகையாகநீர் இயம்பியகுலத்துள்
ஆண்பெண்மாறி அணைதலுமணைந்தபின்
கருப்பொறையுயிர்ப்பதுங் காண்கின்றிலீரோ
எந்நிலத்தெந்தவித் திடப்படுகின்றதோ
அந்நிலத்தந்தவித் தங்குரித்திடுமலால்
மாறிவேறாகும் வழக்கமொன்றிலையே
பூசுரர்ப்புணர்ந்து புலைச்சியீன்ற
புத்திரராயினோர் பூசுரரல்லரோ
பெற்றமுமெருமையும் பேதமாய்த்தோன்றல்போல்
மாந்தரிற்பேதமாம் வடிவெவர்கண்டுளார்
வாழ்நாளுறுப்புமெய் வண்ணமோடறிவினில்
வேற்றுமையாவதும் வெளிப்படலின்றே

தென்றிசைப்புலையன் வடதிசைக்கேகிற்
பழுதறவோதிப் பார்ப்பானாவான்
வடதிசைப்பார்ப்பான் தென்றிசைக்கேகின்
நடையதுகோணிப் புலையனாவான்

அதுநிற்க.

சேற்றிற்பிறந்தசெங் கழுநீர்போலப்
பிரமற்குக்கூத்தி வயிற்றிற்பிறந்த
வசிட்டரும்வசிட்டர்க்குச் சண்டாளிவயிற்றிற்
பிறந்தசத்தியரும் சத்தியர்க்குப்புலைச்சி
தோள்சேர்ந்துபிறந்த பராசரரும்பராசரருக்கு
மீன்வாணிச்சி வயிற்றிற்பிறந்தவியாசரும்

இந்நால்வரும்.

வேதங்களோதி மேன்மைப்பட்டு
மாதவராகி வயங்கினரன்றே
அருந்தவமாமுனி யாம்பகவற்குக்
கருவூர்ப்பெரும்பதிக் கட்பெரும்புலைச்சி
ஆதிவயிற்றினி லன்றவதரித்த
கான்முளையாகிய கபிலனும்யானே
என்னுடன்பிறந்தவர் எத்தனை பேரெனில்
ஆண்பான்மூவர் பெண்பானால்வர்
யாம்வளர்திறஞ்சிறி தியம்புவல்கேண்மின்
ஊற்றுக்காடெனும் ஊர்தனிற்றங்கியே

வண்ணாரகத்தினில் உப்பைவளர்ந்தனள்
காவிரிப்பூம்பட்டினத்திற் கள்விலைஞர்சேரியில்
சான்றாரகந்தனில் உறுவைவளர்ந்தனள்
நரப்புக்கருவியோர் நண்ணிடுசேரியில்
பாணரகத்தினில் ஔவைவளர்ந்தனள்
குறவர்கோமான் கொய்தினைப்புனஞ்சூழ்
வண்மலைச்சாரலில் வள்ளிவளர்ந்தனள்
தொண்டைமண்டலத்தில் வண்டமிழ்மயிலைப்
பறையரிடத்தில் வள்ளுவர்வளர்ந்தனர்
அரும்பார்சோலைச் சுரும்பார்வஞ்சி
அதிகனில்லிடை அதிகமான்வளர்ந்தனன்
பாரூர்நீர்நாட் டாரூர்தன்னில்
அந்தணர்வளர்க்க யானும்வளர்ந்தேன்

ஆதலால்.

மாரிதான்சிலரை வரைந்துபெய்யுமோ
காற்றுஞ்சிலரை நீக்கிவீசுமோ
மாநிலஞ்சுமக்க மாட்டேனென்னுமோ
கதிரோன்சிலரைக் காயேனென்னுமோ
வாழ்நான்குசாதிக் குணவுநாட்டிலும்
கீழ்நான்குசாதிக் குணவுகாட்டிலுமோ
திருவும்வறுமையுஞ் செய்தவப்பேறும்
சாவதும்வேறிலை தரணியோர்க்கே

அலமுமொன்றே குடியுமொன்றே
குறப்புமொன்றே பிறப்புமொன்றே
வழிபடுதெய்வமும் ஒன்றேயாதலால்
முன்னோருரைத்த மொழிதவருமல்
எந்நாளாயினும் இரப்பவர்க்கிட்டுப்
புலையுங்கொலையுங் களவுந்தவிர்ந்து
நிலைபெறவறத்தில் நிற்பதையறிந்து
ஆணும்பெண்ணும் அல்லதையுணர்ந்து
பேணியுரைப்பது பிழையெனப்படாது (சோ
சிறப்புஞ்சீலமுமல்லதுபிறப்புநலந்தருமோபேதையீ

கபிலரகவல்-முற்றிற்று.

வரலாறு.

கபிலர்தனைவளர்த்த பிராமண தாய்தந்தையர்கள் தனக்கு உபநயனஞ்செய்யஎண்ணி மற்றவேதியரைக் கூவ அவர்கள் நம்மரபில் பிறவாத சேய்ஆதலால்கூடாதெனமறுக்க அவ்வந்தணர்களுக்கு இவ்வகவலையுரைத்து உபநயனத்தை முடித்துக்கொண்டனர்.